**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:– திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23–ம் நாள் திங்கள்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனி 09–ம் நாள்**

**இடை நிலை மனு எண்.20/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.187/2014**

1. சுமதி
2. பழனியம்மாள் வகையறா மற்றும் 5 முதல் 25

... மனுதாரர்கள் / வாதிகள்

**//எதிர்//**

1. சிவக்குமார்
   (நீதிமன்ற பாதுகாவலர் வழக்கறிஞர் ரங்கநாதன்)
2. மணிமேகலை
3. சத்யா
4. கிருஷ்ணமூர்த்தி

....எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. லட்சுமி நாராயணன், அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்ற பாதுகாவலர் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ரங்கநாதன் அவர்கள் ஆஜராகியும், 4–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.R. மாணிக்கப்பிரபு, அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை 18 விதி 17 பிரிவு 151 –ன் படி இம்மனு தாக்கல்.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

மேற்படி வழக்கில் 3–ம் பிரதிவாதி 1–வது சாட்சியாக (DW1) விசாரிக்கப்பட்டுள்ளார். தற்பொழுது 4–ம் பிரதிவாதியின் தரப்பில் சாட்சிகளை விசாரிப்பதற்கு வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு 1–வது சாட்சி / 3–ம் பிரதிவாதி சத்யாவை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது. ஆதலால் மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு 1–வது சாட்சியான சத்யாவை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது. எனவே பிரதிவாதிகள் தரப்பு 1–வது சாட்சி / 3–ம் பிரதிவாதி சத்யாவை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி அவரை Recall செய்ய அனுமதி அளிக்க வேண்டுமென்று இம்மனு தாக்கல்.

**3. 4–ம் எதிர்மனுதாரரின் எதிர் உரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மேற்படி மனுதாரர்கள் மேற்படி வழக்கில் சாட்சிகளை விசாரிப்பதற்கு என்று வாய்தா போடப்பட்டிருந்தது. சாட்சிகள் எந்த தேதியில் என்ன காரணத்திற்காக முடிக்கப்பட்டது என்ற விவரங்கள் எதுவும் இல்லாமல் வெறுமனே பிரதிவாதிகள் தரப்பு 1–வது சாட்சியான சத்யாவை வாதிகள் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது என்றும், அதனால் பிரதிவாதிகள் தரப்பு 1–வது சாட்சியான சத்யாவை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய Recall செய்ய வேண்டும் என கூறி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களின் மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய

ஒன்றாகும். மனுதாரர்களின் மனுவில் சிறிதளவும் உண்மையில்லை. இந்த எதிர்மனுதாரர் எவ்வித பலனையும் அடைந்துவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்திலும், இந்நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை விரையம் செய்யும் நோக்கிலும் வழக்கினை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

3. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4. இம்மனுவின் தீர்மானிக்க கூடிய பிரச்சனை யாதெனில் – மேற்படி மனு அனுமதிக்க கூடியதாஎன்பதே ஆகும் ?

**5.தீர்வு:–**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கில் 3–ம் பிரதிவாதி 1–வது சாட்சியாக (DW1) விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், தற்பொழுது 4–ம் பிரதிவாதியின் தரப்பில் சாட்சிகளை விசாரிப்பதற்கு வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், பிரதிவாதிகள் தரப்பு 1–வது சாட்சி / 3–ம் பிரதிவாதி சத்யாவை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி அவரை Recall செய்ய அனுமதி அளிக்க வேண்டுமென்று எடுத்துரைத்தார். ஆனால் கற்றறிந்த 4–ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி மனுதாரர்கள் மேற்படி வழக்கில் சாட்சிகளை விசாரிப்பதற்கு என்று வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், சாட்சிகள் எந்த தேதியில் என்ன காரணத்திற்காக முடிக்கப்பட்டது என்ற விவரங்கள் எதுவும் இல்லாமல் வெறுமனே பிரதிவாதிகள் தரப்பு 1–வது சாட்சியான சத்யாவை வாதிகள் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது என்றும், அதனால் பிரதிவாதிகள் தரப்பு 1–வது சாட்சியான சத்யாவை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய Recall செய்ய வேண்டும் என கூறி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களின் மனு செலவுத்

தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும் எடுத்துரைத்தார்.

இருதரப்பு வாதுரை மற்றும் சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலிக்கையில் மேற்படி வழக்கில் 1–வது சாட்சி / 3–ம் பிரதிவாதி சத்யாவை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தால் தான் வழக்கின் உண்மை தன்மை நன்கு தெரிய வரும் என எடுத்துரைத்திருப்பதையும் கருத்தில் கொண்டும், வழக்கில் இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தும் சாட்சியங்களை பரிசீலித்து தீர்ப்பு வழங்கினால் தான் அது தகுதி வாழ்ந்ததாகவும் அறுதியானதாகவும் இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதாலும், மனுதாரருக்கு அவரது தரப்பை நிரூபிக்க ஒரு வாய்ப்பு வழங்கலாம் இந்நீதிமன்றம் கருதுவதாலும், இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (23.03.2026) இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

<u>1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> **இல்லை .**

<u>2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u> **இல்லை.**

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.